
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1266**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**66**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!




# அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்... உயர்வடைந்த ஊராட்சிக் கட்டமைப்புகள்!

1997-ஆம் ஆண்டு மே 8-ஆம் தேதி, ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை எண்-149 மூலம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திட்டத்தினைத் தொடங்கிவைத்தது தமிழ்நாடு அரசு. திட்டத்தின் பெயர், ‘அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’. “இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் கிராமங்கள் படிப்படியாக முன்னேற்றம் காணும் வகையில், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வோர் ஆண்டும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அதனை அனைத்து வசதிகளும் கொண்ட நவீன கிராமமாக அமைத்திடும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாகச் செயல்படுத்தப்படும்” என்றது அறிவிப்பு. அதன்படி 212 கிராமப் பஞ்சாயத்துகள் தேர்வு செய்யப்பட்டுப் பணிகள் தொடங்கப் பட்டன.

திட்டத்தின் நோக்கம், சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினர்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படைக் கட்டுமான வசதிகள் ஆகியவற்றைக் கொண்டு சேர்ப்பது. அரசின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமமும் சமூகப் பொருளாதார வளர்ச்சியின் ‘எடுத்துக்காட்டுக் கிராமமாக’ உருவாக்க வேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பு.

குடிநீர், தொடக்கக் கல்வி, பொதுச் சுகாதாரம், ஊட்டச்சத்து, குடியிருப்பு, கிராம சாலைகள் மற்றும் அவற்றின் இணைப்பு, நியாய விலைக் கடைகள் எனக் குறிப்பிட்ட ஏழு வசதிகளை ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கும் வகையில், இத்திட்டத்தினைச் செயல்படுத்த உத்தரவிட்டார், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர்.

குறிப்பாக, இந்த அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளை அந்தந்த ஊராட்சிகளே செய்வதற்கான திட்டம்தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில், குறிப்பிட்ட எல்லா குறைந்தபட்ச அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தும் பணிகளைத் தொடங்கின. குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்கு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, கல்வி வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள், தொடக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்களைப் பராமரித்தல், தொடக்கப் பள்ளிகளுக்கு அருகில், நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை அமைத்தல் ஆகியவற்றுக்கான பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு கிராமத்திலும் அனைத்து பெண் குழந்தைகளுக்கும் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிற்றுவிப்பதைக் கண்காணித்தல் என்கிற நடைமுறை கொண்டுவரப்பட்டது. கிராமங்களில் படிக்காதவர்களே இல்லை என்கிற நிலையை உருவாக்கவும், திட்டத்தின் செயல்பாடுகளை வடிவமைத்தார் கலைஞர்.

### கல்வி-சுகாதாரம்

பொதுச் சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், கிராமங்களில் தொடக்க சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் மருந்துகள் வழங்குவது, தேவைப்படும் கிராமங்களுக்கு சார்நிலை ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பது, நோய்த்தடுப்பு மற்றும் அம்மைத் தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் எல்லா குழந்தைகளையும் தொற்றுநோயிலிருந்து பாதுகாத்தல். மகப்பேறுக்கு முன் மற்றும் மகப்பேறுக்குப் பின் போதிய மருத்துவ வசதி அளித்தல், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைப் பரவலாக்குதல், ஆட்கொல்லி எய்ட்ஸ் நோய் பரவலைத் தடுத்தல், உடல்நலம், பல் மற்றும் கண் பாதுகாப்பிற்காக முறையான பரிசோதனை மேற்கொள்ளுதல்.

சத்துணவுத் திட்டத்தின்கீழ், கிராமத்தில் அனைத்து குழந்தைகளையும் மதிய சத்துணவுத் திட்டத்தின்கீழ் கொண்டு வருவது, சத்துணவு மையங்களில் சமையல் கூடங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின்கீழ், பிறந்ததில் இருந்து 36 மாதங்கள் வரை குழந்தைகளைக் கண்காணிப்பது ஆகியவை நடைபெற்றன. குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு மேற்கொள்ளப் பட்டது.

> **2006-ஆம் ஆண்டு கழக ஆட்சியில், ‘அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’ எனப் புதிய வடிவத்தில் செயல்பாட்டுக்கும் கொண்டுவரப்பட்டது.**

இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களுக்கு வீடுகள் கட்டித்தருதல், ‘ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு விளக்கு’ திட்டத்தின்கீழ், எல்லா குடிசைகளுக்கும் மின் விளக்கு அமைத்தல்,

எல்லா சாலைகளையும் தார், கப்பி சாலையாக மேம்படுத்துதல். தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பேருந்து வசதிகள் இணைப்பு வழங்குதல், தேவையான கிராமங்களில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துதல், ‘மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டம்’, ‘முத்துலட்சுமி ரெட்டி திட்டம்’, ‘ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதியத் திட்டம்’ போன்ற திட்டங்களில் தகுதியுடைய அனைவரும் பயன்பெறச் செய்தல். கால்நடைகள் வாங்குவதற்குக் கடன் வசதி, கிராமங்களுக்குத் தொலை பேசி மற்றும் துணை அஞ்சல் நிலையங்கள், பொது பயிலும் அறை, நூலகம், தொலைக் காட்சிப்பெட்டி வசதி செய்து தருவது என கிராமத்தின் முழுத் தேவைக்கும் ‘அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’ தெளிவாகத் திட்ட மிட்டது கழக அரசு. ஏற்கெனவே, பல்வேறு துறைகள்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் செய்தது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, புதிய பொறுப்புகள் உருவாக்கப்பட்டன. திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து, ஒவ்வொரு மாதமும் ஒரு ஆய்வறிக்கையினை சம்பந்தப்பட்ட கிராமத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர், ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். ஊரக வளர்ச்சி இயக்குநர், மாநிலம் முழுமைக்குமான ஓர் ஒருங்கிணைந்த அறிக்கையினை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அரசுக்கு அனுப்ப வேண்டும். திட்ட இலக்குகளை ஒவ்வொர் ஆண்டிலும் மார்ச் மாத இறுதிக்குள் முழுமையாகச் செயல்படுத்தப் பட வேண்டும் என்றும் பணிகள் நடைபெற்று வந்தன.

இந்தத் திட்டத்தின்கீழ், 1997-ஆம் ஆண்டு முதல் 2001-ஆம் ஆண்டு வரையிலான 4 நிதியாண்டுகளில், தமிழ்நாட்டின் 848 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன. 2001-ஆம் ஆண்டு மே மாதம், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அம்மையார் அரசு பொறுப்பேற்றதும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை நிறுத்துவதாக அறிவித்தார். அதற்குக் காரணம், முந்தைய தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அதிக கடன் வாங்கினர் என்றும் தற்போது நிதி நெருக்கடி உள்ளதாகவும் கூறினார் என்றாலும், அடிப்படைக் காரணம், காழ்ப்புணர்ச்சி என சொல்லாமலேயே மக்கள் புரிந்துகொண்டனர். அந்த முடிவுக்கு எதிராக, கழகத்தின் சட்டமன்றப் போராட்டம் திட்டத்தினை வேறு பெயரில் நிறைவேற்றும் நெருக்கடியை அம்மையாருக்கு அளித்தது. தவிர, மீண்டும் 2006-ஆம் ஆண்டு கழக ஆட்சியில், ‘அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்’ எனப் புதிய வடிவத்தில் செயல்பாட்டுக்கும் கொண்டுவரப்பட்டது.

...தொடரும்

## தமிழ்நாடு பற்றவைத்த தீ!

டெல்லியில், ‘நீட்’ தேர்வினை ரத்துசெய்வது உள்ளிட்ட கோரிக்கைகளுடன் ‘காக்ரோச் ஜனதா பார்ட்டி’ இளைஞர்கள் போராடி வருகின்றனர். இது தொடர்பாக, பத்திரிகையாளர் டி.எஸ்.கௌதமன், ‘இந்தப் போராட்டத் தீ, தமிழ்நாடு பற்றவைத்தது’ என முகநூலில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவிலிருந்து...

“நாட்டில் வேலை தேடும் பட்டதாரி இளைஞர்களைக் கிண்டலடித்த அதிகாரத்தின் ஆணவத்துக்கு எதிராகத் திரண்ட கூட்டமே இது! இந்த ஜனத்திரள் நீடிக்குமா, இந்தப் போராட்டம் தொடருமா, கோரிக்கைகளில் வெல்லுமா என்றெல்லாம் அதிகம் யோசிக்கத் தேவையில்லை... இளைஞர்களின் எழுச்சியால், பாராளுமன்றத்தின் கதவுகள் பதற்றத்தோடு அடைக்கப்பட்டுள்ளன. துணை ராணுவம் களமிறங்கியுள்ளது. மெட்ரோ ரயில் நிலையங்கள் மூடப்படுகின்றன. இணைய சேவை துண்டிக்கப்பட்டு, தலைநகர் முழுக்கப் போராடும் இளைஞர்களால் சூழப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம், ஒரே நாளில் திரண்ட கூட்டமல்ல, தமிழ்நாடுதான் இதன் முதல்படி. சகோதரி அனிதாவின் மரணத்தில் தொடங்கி, ஒவ்வொரு ‘நீட்’ மரணமும் நம்முள் அத்தேர்வு குறித்த கேள்வியை எழுப்பிக்கொண்டேயிருக்கிறது. இது மிகப்பெரிய வணிக வாய்ப்பென்பதால், அதிகார வர்க்கம் எதிர்ப்பு குறித்து கவலைப்படவில்லை. அடுத்ததாக, ‘நீட்’ தேர்வுகளில் ஆள்மாறாட்டம், தேர்வு மையங்கள் குளறுபடி, வினாத்தாள் கசிவு, விற்பனை, கோச்சிங் சென்டர் பிசினஸ் என அனைத்தையும் ஜனத்திரள் கவனித்துக்கொண்டே இருக்கிறது. ஆறாம் வகுப்பிலிருந்தே நீட் தேர்வுக்காகக் கல்லா கட்டுவதை... நம் பணத்தைச் சுரண்டுவதைக் கவனித்துக் கொண்டேயிருந்த கூட்டம் இப்போது திரண்டிருக்கிறது. அதிகார வர்க்கத்தின் கனத்த மௌனத்தைக் கிழித்தெறியக் கூடியிருக்கிறது.

‘நீட்’ தேர்வு நடத்துவதில் குளறுபடிகளைத் தடுக்க முடியவில்லை, இப்படியான தேர்வை ரத்துசெய்யுங்கள். இதுவரை உயிரை மாய்த்துக்கொண்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு கொடுங்கள்... கொஞ்சம்கூட மனிதாபிமானமில்லாத... கல்வி குறித்த புரிதலற்ற ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதானைப் பதவியிலிருந்து நீக்குங்கள் என்ற கோரிக்கைகளோடு கூடியிருக்கிறார்கள்... எந்தத் தமிழ்நாடு... ‘நீட்’ தேர்வுக்கெதிராக முதன்முதலாகக் குரல் கொடுத்ததோ... எந்த தி.மு.க. ‘நீட்’ தேர்வுக்கெதிராகச் சட்டப்போராட்டங்களை முன்னெடுத்ததோ... மக்கள் மன்றத்திலும் குரலெழுப்பியதோ... ஒழிப்போமென்று வாக்குறுதி அளித்ததோ... அதே கோரிக்கைக்காக இன்று தேசமே போராட்டத்தில் இறங்கியிருக்கிறது! இது நாம் பற்றவைத்த தீ” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



த.கண்ணன்



### தலைவரிடம் ஊக்கம் பெற்ற நாள்!

2016-ஆம் ஆண்டில், இன்றைய கழகத் தலைவர் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து, வாழ்த்துப் பெற்று பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தேன். தலைவரைச் சந்தித்தது, எனது வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாக, ஊக்கம் பெற்ற நாளாக அமைந்தது.

**– த.கண்ணன்,**
**ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர்,**
**திருவில்லிபுத்தூர் ஒன்றியம்,**
**விருதுநகர் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சர்.பிட்டி தியாகராயருக்கு அணிவகுப்பு மரியாதை!

1959-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் தேதி, சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயர் தேர்தல் நடைபெற்றது. முதல் நிகழ்ச்சியாக, சென்னை மாநகராட்சி மன்றத்துக்கு வெற்றிபெற்ற தி.மு.க. உறுப்பினர்கள் 45 பேரும், பதவிப் பொறுப்பேற்கும் முன்னர், மாநகராட்சி மன்ற மாளிகைக்கு முன், கம்பீரமாக நின்றுகொண்டிருக்கும் நீதிக்கட்சியின் தலைவரும் மாநகராட்சியின் முதல் தலைவராக இருந்தவருமான சர் பிட்டி தியாகராயர் அவர்களின் திருவுருவச்சிலை முன், வரிசையாக அணி வகுத்து நின்று மரியாதை செய்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900